**அக்குரன பிரதேச சபை - 2023**
-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்குரன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அக்குரன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் தீகல முன்பள்ளியின் காணி மற்றும் கட்டிட அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 235,600 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சுரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 676,048 தொகை எனினும், ரூபா 2,546,055 தொகை என காட்டப்பட்டமையால் ரூபா 1,870,007 | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) மீளாய்வாண்டிற்கான அறிவித்தல் பலகை சிட்டையிடல் ரூபா 892,850 தொகை எனினும், ரூபா 1,099,450 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 206,600 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | மேற்படி - |
| (ஈ) நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 114,405 இற்கான உபகரணங்கள் பொதுக் களஞ்சியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) பிங்கா ஓயாவை அண்டி மணல் உற்பத்தி செயற்திட்டத்தில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது அழிவடைந்திருந்த ரூபா 475,000 தொகை பெறுமதியான 95 கியுப் மணல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) மீளாய்வாண்டின் போது செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்த படி ரூபா 187,141 தொகை மூலதனச் செலவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதியிடையே ரூபா 1,567,441 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை பரிசோதனை செய்து சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 ஜூலை 08 ஆம் திகதிய 2235/64 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த திருத்திய 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் | | | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | பகுதி III பந்தி 28(1) | சபையினால் வழங்கப்பட்டிருந்த அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நி.பி. 571(3) | 1980 முதல் 2018 வரை 659 சந்தர்ப்பங்களில் வீட்டு வாடகை வைப்புகள் மற்றும் காலவதியான வைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 214,368 தொகையான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 34,828,187 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 57,683,349 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 7,624,800 | 7,944,819 | 7,482,619 | 3,837,477 | 7,624,800 | 5,810,975 | 11,930,153 | 3,375,277 |
| ii. | வாடகை | 10,527,239 | 6,876,378 | 6,582,790 | 448,444 | 6,383,839 | 6,464,852 | 6,860,367 | 154,856 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,295,500 | 3,687,800 | 3,687,800 | - | 3,855,000 | 3,441,200 | 3,441,200 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 45,417,000 | 20,000,000 | 8,762,928 | 37,887,211 | 25,277,000 | - | 12,259,508 | 26,650,139 |
| | மொத்தம் | 67,864,539 | 38,508,597 | 26,516,137 | 42,173,132 | 43,140,639 | 15,717,027 | 34,491,228 | 30,180,272 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,837,477 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகிற்கான வீதவரி நிலுவை ரூபா 10,000 ஐ மிகைத்துள்ள 40 வீதவரி அலகுகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 920,885 தொகையாக இருந்தது. | நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து வருமானங்கள் சேகரிக்க வேண்டும். |
| (ii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இற்கு இணங்க வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 2011 | புதிய பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,744,466 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 55,507,979 தொகையாக இருந்தது. | விரைவாக வருமானங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தருவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 93(ஆ) ஏற்பாடுகளின் படி பிரதேசத்திலுள்ள வீடுகளில் மலக் கழிவுப்பொருள் அகற்றுவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகள் உரிய காலத்தில் சுத்தம் செய்தல் மற்றும் காலிசெய்வதற்கு முடியுமானவாறு சாக்கடை வண்டிச் சேவையொன்று நடாத்திச் சென்றிருக்கவில்லை. | பொருத்தமான இடமொன்று காணப்படவில்லை என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலம் தொடர்பாக ரூபா 1,126,576 இற்கான நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதியொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,433,495 தொகையாக காணப்பட்டது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முத்திரைக் கட்டண வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபையின் அதிகார பிரதேசத்தில் 9 ஏக்கர் 03 ரூட் 17 பர்சஸ்களைக் கொண்ட கொனகலகல மற்றும் மாவதுபொல. தெனியேபிடிய, சுதுஹகுருவத்த காணி 2012 ஆண்டில் துணைப்பகிர்வு செய்து ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், துணைப்பதிவு வரைபுகள் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காணியை விற்பனை செய்வதன் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஒரு சதவீத வரித் தொகை மற்றும் 10 சதவீத காணியை பெற்றுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு இணங்க வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட வரித் தொகையை அறவிடப்பட வேண்டியதுடன் காணியையும் உரித்தாக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 24,928,666 இற்கான மோட்டர் கிரேடர் இயந்திரம் 2018 ஆண்டு முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பரிமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 03 காணிகள் மற்றும் 08 கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபைகளை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாடுகளின் மூலம் 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 3,804,922 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வாராந்த சந்தை ஒன்று, உடல் ஆரோக்கிய நிலையமொன்று மற்றும் சனசமூக நிலையம் | நி.பி. 103, 104 விசாரணை மேற்கொள்ளப்படும் என. | குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு குறிக்கோள் சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்படாமல் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 11 பதவிகளுக்கான 24 வெற்றிடங்களும் 02 பதவியில் 17 மிகைகளும் காணப்பட்டன. | அரச கொள்கைகள் செயற்படுத்துவதன் காரணமாக வெற்றிடம் காணப்படுவதுடன், மிகை உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றது என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |